Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 5, 2024

வியாழக்கிழமை டிசெம்பர் 05, 2024 | ஒளி: 10 கதிர்: 108 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



# சதொச தேங்காய் ரூ.130

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் சதொச ஊடாக தேங்காய் ஒன்று 130 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் என வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்காக பத்து இலட்சம் தேங்காய்கள் விடுவிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தேங்காய் உற்பத்தி தொடர்பாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் அமைப்பு உள்ளது. அரசு தோட்டங்களில் உள்ள தென்னை பொருட்களை நகர்ப்புற மக்களுக்கு 130 ரூபாய்க்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும், 220 ரூபாய் விலையில் இரண்டு இலட்சம் கிலோ கிராம் அரிசியை நாளொன்றுக்கு விடுவிப்பதற்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் இணங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# 361 பார்களுக்கு 'அரசியல் இலஞ்சம்'

கடந்த அரசாங்கத்தில் நாடு முழுவதும் 361 மதுபான சாலைகளுக்கான அரசியல் இலஞ்சமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக்க, பாராளுமன்றத்தில், புதன்கிழமை (04) தெரிவித்துள்ளார்.

அதில், வடக்கு மாகாணத்திற்கு 32 மதுபான சாலைகளுக்கான அனுமதிகளும் கிழக்கு மாகாணத்திற்கு 22 மதுபான சாலைகளுக்கான அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த அரசில் அரசியல் இலஞ்சமாக பலருக்கு மதுபான சாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை வெளியிடும் எனக் கூறியிருந்தோம். அதற்கமைய அந்த விபரங்களை இந்த சபைக்குச் சமர்ப்பிக்கின்றேன். இதனைச் சகலரும் அறிந்து கொள்ள முடியும்

இந்த விபரத்தின்படி, மேல் மாகாணத்தில் 110 மதுபானசாலைகளுக்கான அனுமதிகளும் தென்மாகாணத்தில் 48, வடக்கு மாகாணத்தில் 32, கிழக்கு மாகாணத்தில் 22, மத்திய மாகாணத்தில் 45, வட மத்திய மாகாணத்தில்14, ஊவா மாகாணத்தில் 30, வடமேல் மாகாணத்தில் 30 சப்ரகமுவ மாகாணத்தில் 30 என 361 மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று சில்லறை மதுபான விற்பனைக்கான அனுமதிகளாக கொழும்பு 2, கம்பஹா 8,களுத்துறை 8, காலி 9, மாத்தறை 5,அம்பாந்தோட்டை 5, யாழ்ப்பாணம் 5, கிளிநொச்சி 16, வவுனியா 2, மன்னார் 2, திருகோணமலை 4, மட்டக்களப்பு 1,அம்பாறை 5, கண்டி 11, மாத்தளை 6,நுவரெலியா 8, அனுராதபுரம் 4,பொலநறுவை 3, புத்தளம் 6,குருநாகல்8, பதுளை 9, மொனராகலை 7, இரத்தினபுரி 6, கேகாலை 2 என 172 அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவுக்கு வழங்கப்படவில்லை என்றார்.



# "மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு"

மலையக மக்கள் 75 வருடங்களாக எதிர்நோக்கும் அனைத்து முக்கிய பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுக்கொடுக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் என அக் கட்சியின் பதுளை மாவட்ட எம்.பியான அம்பிகா சாமுவேல் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) இடம் பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

தொடர்ச்சி P2

# வடக்கையும் தெற்கையும் குழப்பும் முயற்சியா?

மாவீரர் தினத்தை அனுஷ்டித்ததாகப் பொய் பிரசாரங்களையும் போலி தகவல்களையும் சமூகவலைத்தளங்களில் பதிவேற்றி, வடக்கையும் தெற்கையும் குழப்பி இனவாத யுத்தத்தை மீண்டும் ஏற்படுத்தவா இவ்வாறு செய்கிறார்கள்? என கேள்வி எழுப்பிய நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கா, பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்றார்.

சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். அதனால் இந்த சட்டத்தைத் தயாரித்து அமுலாக்கும்வரை வரை நாட்டில் இனவாதம், மதவாதம் தலைதூக்கும்போது அதனை அடக்குவதற்கு தற்போதுள்ள பயங்கரவாத சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(04) நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரைமீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மக்களின் பிரதான எதிர்பார்ப்பாகச் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் நாட்டின் வளங்களை அழித்த மோசடிகாரர்களுக்கு எதிராகச் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதாகவே உள்ளது.இந்த பிரதான இரண்டு விடயங்களை நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற வாக்குறுதியை மக்களுக்கு வழங்குகிறோம்.

கடந்த கால ஆட்சியாளர்கள் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க நடவடிக்கைகளைச் சர்வதேசத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள மாத்திரமே பயன்படுத்தினர். ஆனால் எமது அரசாங்கம் அவ்வாறு செயற்படாது. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது எமது அரசாங்கத்தின் பிரதான கொள்கை. நாங்கள் பல்வேறு மத கலாசாரத்தை பின்பற்றுபவர்கள். அதனால் அனைவரதும் மத கலாசாரத்தைப் பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதுவே எமது கொள்கை.

வடக்கு கிழக்கு தொடர்பில் பேசும் போது, அவர்கள், நாங்கள் என பிரித்தே பார்க்கிறோம். அந்த மனநிலையை மாற்றி, அவர்கள்தான் நாங்கள் நாங்கள்தான் அவர்கள் என்ற மனநிலையை ஏற்படுத்த வேண்டும். அனைத்து இனத்தவர்களும் இலங்கையர்கள் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால்தான் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கு ஆளாக்கப்பட்டோம். ஆனால், அந்த நிலை யாருக்கும் ஏற்படும்வகையில் எமது அரசாங்கம் செயற்படாது.

இந்நிலையில், அடுத்த வருடம் முதல் காலாண்டில் திருடப்பட்ட சொத்துக்களை மீட்பது,பணமோசடி, போதைப்பொருள் கடத்தல் மற்றும் அதனுடன் தொடர்பு பட்ட குற்றங்களைத் தடுத்தல் தொடர்பான 3 புதிய சட்ட மூலங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். குற்றவியல் சட்டமூலம், மீட்பு, புனர்வாழ்வு, வங்குரோத்து தொடர்பான சட்டமூலம் மற்றும் கணக்காய்வு சட்டமூலம் ஆகியவற்றுக்கான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படும் என்றார்.





# பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவியாக சரோஜா சாவித்திரி தெரிவு

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் முதல் தடவையாகப் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) கூடியது. இதில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஹேமாலி வீரசேகர, பாராளுமன்ற செயலாளர் நாயகமும், ஒன்றியத்தின் செயலாளருமான குஷானி ரோஹனதீர உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் புதிய தலைவராகப் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## மாவீரர் தின அனுஷ்டிப்புக்களை வைத்து

# "இன முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சி"



வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற மாவீரர் தின அனுஷ்டிப்புக்களைத் திட்டமிட்ட வகையில் திரிபு படுத்தி வடக்கு - தெற்குக்கிடையில் இனவாத முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் புகைப்படம் மற்றும் காணொளிகளைப் பதிவேற்றம் செய்தவர்களில் இருவர் புதிய ஜனநாயக முன்னணியின் செயற்பாட்டாளர்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# 500 தரக்குறைவான மருந்துகளால் நோயாளர்கள் ஆபத்தில்

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் இன்றி சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தரமற்ற மருந்துகள் நாட்டில் புழக்கத்தில் உள்ளதால் நோயாளிகளின் உயிருக்கு பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் அவசரகால கொள்வனவுகளில் 40 சதவீதமானவை இந்த நாட்டில் பதிவு செய்யப்படாத மருந்துகளை உள்ளடக்கியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர்கள் குழு தெரிவித்துள்ளது.

பல மருத்துவமனை



# தேசிய மக்கள் சக்தியை புகழ்ந்தார் அர்ச்சுனா

தேசிய மக்கள் சக்தி இனவாதக் கட்சியல்ல. அதனால்தான் வடக்கிலுள்ள பொய் தமிழ் அரசியல்வாதிகளை மக்கள் தோற்கடித்து தேசிய மக்கள் சக்திக்கு 3 ஆசனங்களைப்பெற்றுக் கொடுத்துள்ளனர் என யாழ். மாவட்ட எம்.பியான இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான தயாசிறி ஜெயசேகரவுக்கும் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக்காவுக்குமிடையில் யார் இனவாதிகள் என்பது தொடர்பில் கடும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில், திடீரென எழுந்து கருத்தை முன்வைக்கையிலேயே இவ்வாறு அர்ச்சுனா எம்.பி. குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## மாவீரர் விவகாரத்தில்

# இரட்டை நிலைப்பாடு ஏன்?

வடக்கில் மாவீரர்களை நினைவுகூர்ந்த சிவாஜிலிங்கம் தண்டனை சட்டக் கோவையின் கீழ் கைது செய்யப்படுகிறார். மாவீரர்களை நினைவுகூர்ந்ததை வெளிப்படுத்திய சமூக செயற்பாட்டாளர்கள் தெற்கில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரைமீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

கடந்த பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் திருடர்கள் என்று முத்திரை குத்தப்பட்டார்கள் . ஆகவே, உண்மையான திருடர்களை சட்டத்தின் முன்னிலையில் நிறுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

தொடர்ச்சி P2



# "சம உரிமையை உறுதிப்படுத்தவும்"

தமிழ் மக்களுக்கும் இந்த நாட்டில் சம உரிமையுள்ளது. எனவே, அந்த சம உரிமைகள் தேசிய மக்கள் சக்தி அரசினால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்திய இரா. சாணக்கியன் எம்.பி, இந்த அரசை வீழ்த்துவதோ எதிர்ப்பதோ எமது நோக்கம் அல்ல.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "இன முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சி"

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(04) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் கடந்த இரு வாரங்களில் இடம்பெற்ற கைதுகள் மற்றும் அதற்கான காரணங்களைச் சபைக்கு அறிவிப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

வடக்கு, கிழக்கில் அண்மையில் இடம்பெற்ற மாவீரர் தின அனுஷ்டிப்பு நாட்டில் பிரதான பேசுபொருளாகவுள்ளது. உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரும் உரிமை அனைவருக்கும் உண்டு. வடக்கு மற்றும் கிழக்கு, தெற்கு உட்பட அனைத்து மாகாணங்களுக்கும் இந்த உரிமை உண்டு. நாங்கள் இன்றும் இந்த நிலைப்பாட்டில்தான் உள்ளோம்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே இந்த அமைப்பின் கொடி, சின்னம் ஆகியவற்றைப் பயன்படுத்த இடமளிக்க முடியாது என்பதைத் தெளிவாக அறிவித்துள்ளோம். கல்கமுவ பகுதியில் அண்மையில் நான் குறிப்பிட்ட விடயத்தை திரிபப்படுத்தி பொய்யான வகையில் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இந்த பொய்யான செய்தி தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. இவ்விரு மாகாணங்களிலும்

244 மாவீரர் தின அனுஷ்டிப்புக்கள் இடம்பெற்றன. இவற்றில் 10 அனுஷ்டிப்புக்களில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அடையாளங்கள் காட்சிப்படுத்தப்பட்டன அல்லது ஊக்குவிக்கும் வகையில் ஒரு சில விடயங்கள் இடம்பெற்றிருந்தன. இது தொடர்பில் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாவீரர் தின அனுஷ்டிப்பின் போது, விடுதலைப் புலிகள் அமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் இடம்பெற்ற செயற்பாடுகள் தொடர்பில் கிளிநொச்சி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய நீதிமன்றங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் சுன்னாகம் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினம் குறித்து தெற்கில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையில் பல விடயங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டன. 2018 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தின புகைப்படங்கள் மற்றும் காணொளிகளைத் திரிபு படுத்தி அவை 2024ஆம் ஆண்டு மாவீரர் தினம் என்று தெற்கில் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவேற்றம் செய்த நால்வர் கைது செய்யப்பட்டனர். வடக்கில் ஒருவரும் பத்தேகம, மருதானை, பொரகஸ்கமுவ ஆகிய பகுதிகளில் ஏனையவர்களும் கைது செய்யப்பட்டனர்.

வடக்கு - தெற்கு மாகாணங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் தவறான செய்திகளை பதிவேற்றம் செய்தவர்களில் இருவர் புதிய ஜனநாயக முன்னணியின் செயற்பாட்டாளர்கள் .

ஊடகச் சுதந்திரத்தை முடக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது. இருப்பினும் அனைத்து உரிமைகளும் இனங்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். கடந்த காலப்பகுதியில் மலட்டு கொத்து, மலட்டு ஆடை, கருத்தடை உள்ளிட்ட பல இனவாத கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இறுதியில் விளைவு பாரதூரமானதாக அமைந்தது. இவ்வாறான நிலைமை மீண்டும் தோற்றம் பெறுவதற்கு இடமளிக்க முடியாது.எனவே புதிய சட்டங்களை இயற்றியேனும் தேசிய நல்லிணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# புகழ்ந்தார் அர்ச்சுனா

கடந்த அனைத்து அரசுகளிடமும் இனவாதம் இருந்தது. தமிழர்களான எம்மை பிரித்தே பார்த்தார்கள். இனவாத ஆட்சியைத்தான் செய்தார்கள். ஆனால், தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசிடம் இனவாதம் இல்லை. அதனால்தான் வடக்கு மக்கள் பொய் பேசும் தமிழ் அரசியல்வாதிகளைத் தோற்கடித்து தேசிய மக்கள் சக்திக்கு 3 ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்தார்கள். அத்துடன், சுயேச்சை குழுவான என்னையும் வெற்றி பெற வைத்தார்கள்.

எதிர்க்கட்சிகள் தான் இப்போது இனவாதத்தை முன்னெடுக்கின்றன. தேசிய மக்கள் சக்தி இனவாதத்தை முன்னெடுக்கவில்லை என்றார்.

# இரட்டை நிலைப்பாடு ஏன்?

ஆட்சிக்கு வந்தவுடன் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்வதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை இரத்து செய்வதாகவும், குடும்ப ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதாகவும் கூறப்பட்டது. ஆனால் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் மனைவி அரசாங்கத்தில் உள்ளார்.

இனவாதத்திற்கு இடமில்லையென அரசாங்கம் கூறுகின்றது. இனவாதத்தை இல்லாதொழிக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன். இனவாதிகளுக்கு ஒருபோதும் மன்னிப்பு வழங்க கூடாது. கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.ஆனால்

வடக்கில் சிவாஜிலிங்கம் தண்டனை சட்டகோவையின் பிரகாரம் கைது செய்யப்படுகிறார். தெற்கில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சமூக செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு? இவ்வாறான கைதுகளின் போது சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுங்கள் என்றார்.

# "மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு"

காணிப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை, சம்பளப் பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் தொடர்கின்ற நிலையில், அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டங்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியுள்ளது

மலையகத்தின் பதுளை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள முதலாவது தமிழ் பெண் உறுப்பினர் என்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அதற்காக பதுளை மாவட்ட மக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் .

அந்தந்த சமூகத்தில் உள்ள உண்மையான பிரதிநிதிகளைத் தெரிவு செய்தமையால்தான் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு, தெற்கு என முழு நாட்டு மக்களினதும் ஆதரவைப் பெற்றது. . மலையகத்திலும் அவ்வாறான தெரிவே இடம் பெற்றுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும். குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக மாற்றுத்திறனாளி ஒருவரையும் அந்த கட்சி தெரிவுசெய்தது. கடந்த 75 வருட அரசியலில் மலையக மக்களின் முக்கியமான பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. தற்காலிகமாக சில தீர்வுகள் அந்த மக்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். அதற்குத் தீர்வாகத்தான் மலையக மக்களின் பிரதிநிதியாக அந்த மக்களின் கஷ்டங்களை அறிந்தவள் என்ற வகையில் அந்த மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் மற்றும் அவர்களின் வாழ்க்கை மாற்றத்திற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் தேசிய மக்கள் சக்தி எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியானது மலையக மக்களின் காணிப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை அதேபோன்று அந்த மக்களின் சம்பளப் பிரச்சினை, சுகாதாரம், கல்வி என முக்கியமான பல பிரச்சினைகளுக்கான தீர்வை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே தேசிய மக்கள் சக்தி ஹட்டன் பிரகடனத்தின் மூலம் முன்வைத்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கிராமப்புறத்திலும் மலையகத்திலும் வறுமை ஒழிப்பு முக்கிய தேவையாக உள்ளது. காணி உரிமை தொடர்பில் தற்போது பேசப்பட்டு வருகிறது அதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். அத்துடன் மலையக மக்களின் முக்கியமான பிரச்சினை அவர்களுக்கான அங்கீகாரமாகும். மலையகத் தமிழர்கள் என்ற அடையாளத்தோடு அவர்களும் இலங்கையர்கள் என்ற ரீதியில் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கான சலுகைகள் கடந்த காலங்களில் பறிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலை மாற்றம் பெற்று மலையகத் தமிழர்கள் என்ற ரீதியில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் எதிர்கால சந்ததிகளும் சமூகமும் முன்னேற்றமடையவும் தேவையான வேலைத் திட்டங்களைத் தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்கும்.

மலையகத்தின் கல்வி தோட்டப்புற பாடசாலை என்ற ரீதியில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. அனைத்து வசதிகளையும் கொண்ட பாடசாலைகளை அங்கு உருவாக்குவதே எமது நோக்கம்.இத்தகைய நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தத் தேசிய மக்கள் சக்தி தமது கொள்கைப் பிரகடனத்திலும் வேலைத் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

இக்காலங்களில் மலையகப் பகுதிகளில் மண் சரிவு பாதிப்புகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் மண் சரிவினால் கடந்த இரண்டு வருடங்களாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இதுவரை வீடுகள் வழங்கப்படவில்லை. அதற்கான வேலைத் திட்டங்களை எமது அரசாங்கம் துரிதப்படுத்தும்.

மலையக தோட்டப் பகுதி பெண்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர். அவர்கள் தொழில் செய்யும் இடங்களில் காணப்படும் பிரச்சினைகள், பொது வசதிகள் தொடர்பான பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# தலைவியாக சரோஜா சாவித்திரி தெரிவு

அவருடைய பெயரைப் பாராளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் அனுஷ்கா திலகரத்ன வழிமொழிந்தார்.

அத்துடன், பெண் பாராளுமன்ற ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களாக இருவர் தெரிவு செய்யப்பட்டனர். இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர் சமிந்திராணி பண்டார கிரிஎல்லே, பிரதி இணைத்தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன், இவருடைய பெயரை ரோஹினி விஜேரத்ன முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் துஷாரி ஜயசிங்க வழிமொழிந்தார். மேலும் மற்றுமொரு பிரதி இணைத்தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க தெரிவுசெய்யப்பட்டதுடன், அவருடைய பெயரை பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் தீப்தி வாசலகே வழிமொழிந்தார்.

இங்குக் கருத்துத் தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய குறிப்பிடுகையில், பொதுமக்களின் வாக்குகளால் குறிப்பிடத்தக்க வீதமான பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது சிறந்த வெற்றியாகும் என்றார். எனவே, அரசியல் வேறுபாடுகள் இன்றி பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் செயற்பட வேண்டியது அவசியம் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்துப் பெண்களுக்கும் பாதுகாப்பான நாட்டை உருவாக்குவது ஒன்றியத்தின் நோக்கம் ஒன்றியத்தின் தலைவி அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

அத்துடன், ஒன்றியத்தால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க இரு துணைத் தலைவர்கள் தலைமையில் உபகுழுவொன்று அமைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்ன அவர்களின் பரிந்துரைக்கு அமையப் பாலின அடிப்படையில் இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிரான தினத்தை எதிர்வரும் 06ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

# 500 தரக்குறைவான மருந்துகளால் நோயாளர்கள் ஆபத்தில்

பணிப்பாளர்கள் மருந்து ஆய்வுக் கூடங்களில் சுகாதார தலைமை அதிகாரிகளுக்கு இந்த புள்ளிவிபரங்களைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் முறையான மறுபதிவு மற்றும் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மருந்துகளின் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்படுவதற்கு முன்பாக, தலைமை நிர்வாக அதிகாரி தன்னிச்சையாக விலைகளை ஒழுங்குபடுத்தியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருந்து உற்பத்தியை ஒரு தொழிலாகக் கொண்ட நாடுகளில் மருந்துகளின் விலையைக் கட்டுப்படுத்த தனி சுயாதீன நிறுவனமும், மருந்துகளின் தரத்தை ஒழுங்குபடுத்த பல தனி நிறுவனங்களும் உள்ளன.

இது தொடர்பில், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லானவிடம் நாம் கேட்டபோது, அவ்வாறானதொரு நிலை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இன்று தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் மாபியாக்களின் தலைமையகமாக மாறியுள்ளதாகவும், அதன் நிர்வாகிகள் சொத்தை அபகரித்த கும்பலாக நடந்து கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

பெல்லானா மேலும் கூறுகையில், மருந்து நிறுவனங்கள் அதிக அளவில் பணம் வசூலித்தாலும், பணத்துக்கு ஏற்ற வகையில் சேவைகளை வழங்குவதில்லை என்றார்.

# "சம உரிமையை உறுதிப்படுத்தவும்"

அரசின் முற்போக்கான நடவடிக்கைளுக்காகக் காத்திருக்கின்றோம் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(04) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்திக்கு எவ்வாறு நாடு முழுவதும் மக்கள் ஆணை கிடைத்ததோ அதேபோன்று வடக்கு, கிழக்கில் தமிழரசுக்கட்சிக்கே மக்கள் ஆணை கிடைத்துள்ளது. அத்துடன் அநுர சுனாமியை எமது மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தைரியமாக எதிர்த்து நின்றது. அதனால்தான் அங்கு நாம் வரலாற்று வெற்றியைப்பெற்றோம்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட் ட அரசியல் கைதிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும். எனினும் இப்போது பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

இதேவேளை, காணாமல் போனோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக இந்தக் குற்றத்தை செய்தோர் தண்டிக்கப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் அரசு வகைப்பொறுப்புக்கூற வேண்டும் என்பதுடன் அரசின் நிலைப்பாட்டையும் அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# 4 மாதங்களுக்காக 9,60,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்துக்கு 2025 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி வரையான 4 மாத காலப் பகுதிக்கான கணக்கு வாக்குப்பதிவாக 9,60,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது

இதில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கென 20,801 கோடியே 9,575,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நிதியிலிருந்து ஜனாதிபதியின் செயல்முறை மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 127 கோடியே 9,940,000 ரூபாவும் பிரதமர் அலுவலகத்துக்காக 37 கோடியே 80 இலட்சம் ரூபாவும் நிதி அமைச்சுக்காக 18,603 கோடியே 1,812,000 ரூபாவும் பாதுகாப்பு அமைச்சுக்காக 14,295கோடியே 50 இலட்சம் ரூபாவும் நீதி,தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்காக 1,727 கோடியே 3,160,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்காக 16,199 கோடியே 9,998,000 ரூபாவும் கல்வி,உயர்கல்வி அமைச்சுக்காக 9,200 கோடி ரூபாவும் பொது நிர்வாக ,மாகாண சபைகள் அமைச்சுக்காக 17,047 கோடியே 6,415,000 ரூபாவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்காக 6,506 கோடியே 4,575,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, புத்தசாசன சமய கலாசார அமைச்சுக்கு 323கோடியே63 இலட்சம் ரூபாவும் வெளிநாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சுக்கு 592 கோடியே 7,350,000 ரூபாவும் வர்த்தக வாணிப அமைச்சுக்கு 88 கோடியே 57 இலட்சம் ரூபாவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 22,007கோடியே 50 இலட்சம் ரூபாவும் கமத்தொழில்,கால்நடை,காணி ,நீர்பாசன அமைச்சுக்கு 6,736 கோடியே 10 இலட்சம் ரூபாவும் வலுசக்தி அமைச்சுக்கு 4,330கோடியே 550,000 ரூபாவும் நகர அபிவிருத்தி,நிர்மாணிப்பு வீடமைப்பு அமைச்சுக்கு 1,719 கோடியே 4,920,000 ரூபாவும் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு அமைச்சுக்கு 365 கோடியே 20 இலட்சம் ரூபாவும் மிகுதி ஏனைய அமைச்சுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.



# பகைத்துக் கொண்டோ, இணைந்து கொண்டோ “சாதிக்க முடியாது”

13 ஆவது திருத்தத்தை இல்லாது செய்வதன் மூலம் இந்தியாவுடன் பகைத்துக் கொண்டோ அல்லது சீனாவுடன் இணைந்து கொண்டோ எதையும் சாதிக்க முடியாது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்ததுடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது மலையக மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(03) இடம்பெற்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார். நடந்து முடிந்த தேர்தலில் வாக்களிப்பு இன பாரபட்சம் இல்லாத வகையிலேயே நடந்துள்ளது. இது தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இது நாட்டின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் சிறந்த சகுனம்

இதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அண்மையில் தெரிவித்திருந்தார். இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தை மாற்றி இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அது தொடர்பில் சிந்தித்துச் செயற்படுவது அவசியம்.

பூகோள ரீதியில் எமக்கு மிக அண்மித்த நாடு இந்தியா. அந்த நாட்டைப் பகைத்துக் கொண்டு அல்லது சீனாவோடு நாம் சேர்ந்து கொண்டு எதையும் சாதிக்க முடியாது என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது அதே வேளை, புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் போது மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என வலியுறுத்த விரும்புகின்றேன். என்றார்.

## மண்டைதீவில் கஞ்சா மீட்பு

■ செந்தூரன் பிரதீபன்



யாழ்ப்பாணம்- மண்டைதீவு கடல் பகுதியில் 188 கிலோ கிராம் கஞ்சா தொகை கடற்படையினரால் புதன்கிழமை (04) அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த டிங்கி படகினை சோதனை செய்ய முற்பட்டபோது, படகிலிருந்த இரண்டு நபர்கள் தப்பிச் தப்பியோடியுள்ளனர். எனினும், 188 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன், படகின் உரிமையாளர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கடற்படையின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



## மருதமுனை பகுதிக்கு வடிகான் திட்டம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கும் மருதமுனை 65 மீட்டர் சுனாமி மீள்குடியேற்றக் கிராம மக்களின் பாதுகாப்பு கருதி கல்முனை மாநகர சபையினால் துரித கதியில் வடிகான்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரதேச மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வருகின்ற வெள்ள அனர்த்த பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இங்கு 05 முக்கிய இடங்களில் வடிகான்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் ஊடாக இப்பிரதேசத்தில் உள்ள அனைத்து வடிகான்களும் இணைக்கப்பட்டு வடிகான் கட்டமைப்பு முழுமைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வடிகான் நிர்மாணப் பணிகளை கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் செவ்வாய்க்கிழமை (03) அன்று கண்காணிப்பு விஜயம் செய்து பார்வையிட்டார். இதன்போது இவ்வேலைத் திட்டத்தைத் துரிதமாக நிறைவு செய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌசி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம்.நஹீம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் எம்.சுகுமார் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

## இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வழிபாடு

■ செந்தூரப் பிரதீபன்



பலாலியில் மக்கள் வழிபாட்டுக்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் புதன்கிழமை (04) இடம்பெற்ற வழிபாடுகளில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க பங்கேற்றனர்.

இதன்போது ஆலய நிர்வாகத்தினராலும், ஆலயக் குருக்களாலும் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலாளர் க.சிறிமோகனன், கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க இலங்கை இராணுவ தொண்டர் படையின் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.





## புதிய கவுன்சில் உறுப்பினர்கள் தெரிவு

இலங்கை தொழில்முறை பெண்களின் அமைப்பு, அதன் 83ஆவது ஆண்டு பொதுக் கூட்டத்தை கொழும்பில் உள்ள அதன் தலைமையக கூடத்தில் கடந்த 23ஆம் திகதியன்று நடத்தியது.

கலந்து கொண்டவர்கள் தவிர, வெளிநாட்டு உறுப்பினர்களும் ஜப்பான் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து நிகல்நிலை ஊடாக கலந்து கொண்டனர். கேணல் கலாநிதி உதுல கிருஷ்ணரத்ன தலைவியாக மீண்டும் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

SLFUW இன் தலைவர் தனது உரையில்,“SLFUW இலங்கையிலும் வெளிநாட்டிலும் தொடர்ந்து வலுப்பெற்று எமது தாய்நாட்டிற்குச் சேவையாற்றி வருகின்றது ஜாதி, மத வேறுபாடின்றி அனைவரும் வாழச் சிறந்த மற்றும் மகிழ்ச்சியான இடமாக மாற்றுவதற்கு இலங்கையை மாற்றுவதற்கு அது செயற்படுகின்றது” என்றார்.

2024/2025க்கான SLFUW நிர்வாக சபை உறுப்பினர்களின் பட்டியல்

தலைவர் : கேணல் டாக்டர் உதுல கிருஷ்ணரத்ன, 1ஆவது துணைத் தலைவர்: டாக்டர் நிர்மலி டி சில்வா, 2ஆவது துணைத் தலைவர் எந்திரி லக்மினி நோனிஸ், வெளிநாட்டுத் தொடர்பாளர்: பேராசிரியர் மகேஷ கபுருபண்டார, ஹொனி. செயலாளர்: ருக்மணி சமரநாயக்க, பொருளாளர்: தர்ஷினி பெரேரா, பத்திரிகை மற்றும் விளம்பர அதிகாரி: ஷ்யாமினி பாலசூரிய, உதவி. செயலாளர்: நெலிய பெர்னாண்டோ, உதவி. பொருளாளர்: சாவித்திரி ஜெயசூரிய. ஞானகாந்தி மகலந்த, அஞ்சலி கமகே, இந்திரா புவிமானசிங்க, கலாநிதி சம்பா கோடிப்பில்லி, கிமிகோ கயாமோரி, இந்திரா சமரசிங்க, நிலுபிகா விஜேதுங்க, ரோஹினி துல்லேவ, நிர்மலா ஏகநாயக்க, சாமுத்திரிகா ஹேரத், ஆரியமாலா படுகே, தேவிகா பனாகொட மற்றும் ரமணி காரியவசம் ஆகியோர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## கிக்பொக்சிங் போட்டியில் நபீர் அஹமட்டுக்கு தங்கம்

அகில இலங்கை கிக்பொக்சிங் போட்டித் தொடரில், 12 வயதுக்குட்பட்ட பிரிவில் வெலம்பொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் எம்.என். நபீர் அஹமட் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இந்த போட்டி, நாவலப்பிட்டிய ஜயதிலக்க விளையாட்டரங்கில் 2024 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி முதல் டிசம்பர் 1ஆம் திகதி வரை நடைபெற்றது.

இந்த வருடம் தங்கப் பதக்கம் வென்ற இந்த மாணவன் கடந்த வருடமும் அதற்கு முந்தைய வருடம் நடந்த போட்டிகளில் முறையே தங்கப் பதக்கம் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

கம்பலையைச் சேர்ந்த D.M.நவ்ஷாத், இந்த மாணவரின் பயிற்றுப்பாளராக செயற்பட்டார் என்பதுடன், இவர், வெலம்பொடையைச் சேர்ந்த M.N.நலீம் S.A.நசீரா தம்பதியினரின் புதல்வராவார்.







## பாரிய திருட்டு: எழுவர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து பொருட்களைத் திருடி, விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவர் ஹட்டன் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீடுகளில் உள்ள உடைமைகளைச் சிலர் திருடுவதாக ஹட்டன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகளின் அடிப்படையில், விசாரணைகளை ஆரம்பித்த ஹட்டன் பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அவரிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில், திருடப்பட்ட பொருட்கள் காலணிகள், எரிவாயு சிலிண்டர்கள், ஆடைகள், என்பன ஹட்டன் பிரதேசத்தில் பலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் பகுதியில் திருடப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்த 6 பேரைக் கைது செய்துள்ளதாகவும், திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஏழு சந்தேக நபர்களையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்தவுள்ளதாக ஹட்டன் பொலிஸ் பரிசோதகர் குமாரகே குறிப்பிட்டுள்ளார்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர்:** ஸ்மித்க்லைன் பீசம் (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் இலக்கம்:** பீபி 4436
**பதிவு அலுவலக முகவரி:** உலக வர்த்தக மையம், நிலை 34, மேற்கு கோபுரம், எச்செலன் சதுக்கம், கொழும்பு 01
**கம்பனியின் புதிய பெயர்:** ஹேலியோன் லன்கா (பிரைவட்) லிமிட்டட்

**மற்றும் சார்பாக**
**ஹேலியோன் லன்கா (பிரைவட்) லிமிட்டட்**
**ஜேசி மற்றும் கம்பனி**
**செயலாளர்கள்**

## பொது அறிவித்தல

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர்:** க்லெக்சோ வெல்கம் சிலோன் லிமிட்டட்
**கம்பனியின் இலக்கம்:** பீபி 542
**பதிவு அலுவலக முகவரி:** இல.121, காலி வீதி, கல்தேமுல்ல, மொரடுவ.
**கம்பனியின் புதிய பெயர்:** ஹேலியோன் லங்கா என்டர்ப்ரைசஸ் லிமிட்டட்

**மற்றும் சார்பாக**
**ஹேலியோன் லங்கா என்டர்ப்ரைசஸ் லிமிட்டட்**
**ஜேசி மற்றும் கம்பனி**
**செயலாளர்கள்**

# இனவாதத்தை தூண்டி அரசியல் சூடுகாய முற்படக்கூடாது

இந்த நாட்டில் இனவாத அரசியலுக்கு இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறு வந்தால் சட்டம் முழுமையாக அமல்படுத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்துள்ளது. தெற்கிலும் வடக்கிலும் உள்ள மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்ற தயாராகவே புதிய அரசாங்கம் இருக்கிறது என்றும் அறிவித்துள்ளது.

இந்நாட்டு அரசியலின் முக்கிய அம்சம் என வர்ணிக்கக்கூடிய இனவாத அரசியலில் ஈடுபட்டவர்களுக்கும் அதன் மூலம் அதிகாரத்தைப் பெற முயல்பவர்களுக்கும் ஏற்பட்ட கதி கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் காணக்கூடிய உண்மையாகும்.

இவர்களது இனவாத மதவாத அரசியலும் நாட்டின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இனவாதம் வேண்டாம் என்று கடந்த காலங்களில் சுட்டிக் காட்டினாலும், மீண்டும் மீண்டும் அதே போன்று நடந்தது. எனினும், அதற்கு எதிராக எவ்வாறு புதிய அரசாங்கம் செயல்பட வேண்டும் என்பதை நினைவூட்டவோ, காட்டவோ தேவையில்லை என நினைக்கின்றோம். ஏனெனில், கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் பிரசாரங்களில் போது, இனவாதத்தை, தேசிய மக்கள் சக்தி கையிலெடுக்கவே இல்லை என்பதை உறுதியாகக் கூற முடியும்.

ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார மேடைகளில் ஒன்றில் உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் புதிய ஜனாதிபதியுமான அனுரகுமார திசாநாயக்க,“ நான் தோற்றாலும் பரவாயில்லை, இனவாதம் பேசமாட்டேன்” என்றார். இந்த புதிய அரசாங்கத்தை வழிநடத்த வேண்டியது எதிர்க்கட்சிகளின் முக்கிய பங்காகும். எதிர்க்கட்சிகளின் பங்கு அரசாங்கத்தின் அனைத்தையும் எதிர்ப்பது அல்ல, ஒரு நாடாக நம்மை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் நல்ல செயல்களுக்கு ஆதரவளிப்பதாகும். எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் எதிர்கால அரசாங்கத்தை அமைக்கும் நோக்கில் செயற்படுகின்றனர், அவர்களின் பாத்திரங்களை நன்கு உணர்ந்து செயல்பட்டால் ஒரு நாடாக நாம் மகிழ்ச்சி அடையக் கூடியதாக இருக்கும்.

கடந்த அரசாங்கங்களின் முன்னாள் தலைவர்களின் செயற்பாட்டின் பெறுபேறுகளை இன்று அவர்கள் பெற்றுள்ளனர். அரசியலில் மட்டுமல்ல, வாழ்க்கைத் தத்துவத்திலும் இது ஒரு பொதுவான கோட்பாடு. புதிய பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனைப் புரிந்து கொண்டு கையாள்வதில் கவனம் செலுத்துவது அனைவருக்கும் நல்லது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ, ” இனவாதத்தை ஒடுக்குவதற்கு தற்போது உள்ள சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்றால் புதிய சட்டங்கள் கொண்டுவந்தேனும் அதைச் செய்துமுடிப்போம்” என்றார்.

“அரசியல் நோக்கங்களுக்காக இனவாதத்தைத் தூண்டுவதற்கு சில தரப்புகள் முற்படுகின்றன. இனவாதத்தைத் தூண்டி நாட்டை நாசமாக்க முற்படுகின்றனர். இனவாதத்துக்கு இடமளிக்கப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார் அவை வரவேற்கத்தக்கது.

நாடு பொருளாதார ரீதியில் கடும் பள்ளத்தில் விழுந்துள்ளது. ஒவ்வொரு குடும்பங்களும் அடுத்த நொடி பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றன. பொருட்களின் விலைகளில், சேவைகளின் கட்டணங்களில் பாரிய மாற்றங்கள் இல்லை. ஆகையால், பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்க கைகோர்க்க வேண்டும். இனவாதத்தைத் தூண்டி அரசியல் சூடு காய முற்படக்கூடாது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எந்தவொரு தனிமனிதனையோ அணியினரையோ குழுவினரையோ, துன்புறுத்துவதற்கு உட்படுத்துவதோ விலக்கிவைப்பதோ தீமைகளையே உருவாக்கும். யாவரையும் முழுமையாக ஏற்றுக்கொள்வேன் எனும் திடசங்கற்பத்துடன, இறைவனுக்கு வாக்குறுதி அளிப்பீர்களாக! இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும். இறைவனுக்கு வாக்குறுதி அளிப்பீர்களாக! இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும்.

இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும், இந்தப் பிரகடனத்தைக் கடவுள் முன் ஒப்படைத்து, அதன்படி ஒழுகினால், அதன் பெறுபேற்றை மக்கள் உடன் அறிந்து தெளிவார்கள். இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும்.

உலகத்தில் பாவங்கள் மிகவும் உக்கிரமாகக் கூடிக்கொண்டு வருகின்றன. இந்த நிலைமையை சரிசெய்வது எப்படி? ஒவ்வொரு பிரஜையும் தன்னைத்தான் உணர்ந்தும் உலக மாற்றங்களையும் துன்பங்களையும் மனமாறத் தெரிந்துகொண்டால், கெட்ட குணங்கள் எரிந்து அழிந்து விடும்.

மீண்டும் புதியதொரு களிப்பு மிக்க மக்கள் கூட்டத்துடன், மிடுக்கு, நேர்மை மிகுந்து உறுதியுடன் அவதாரம் எடுக்கும் யுகங்கள் தோறும், போரும் அழிவும் நடந்த வண்ணமே உள்ளன. இந்நிலை தொடராமல் இருக்க, சத்திய புருஷர்களாக உருவாகியே தீரவேண்டும்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# “சிங்களவருக்கு தமிழ், முஸ்லிம்கள் சமமில்லை”

முருகானந்தம் தவம்

தற்போது ஆட்சியிலிருக்கும் தேசிய மக்கள் சக்தி, ஜே .வி.பி.ஆகியவற்றின் தலைவரான ஜனாதிபதி அனுரகுமார மீது அளவுக்கு அதிகமாக நம்பிக்கை வைத்து விட்டோமோ என நாட்டின் சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் மனம் வருந்தும் வகையிலேயே ஜனாதிபதியும் அவரது அரசும் ‘புதிய திசை , புதிய மாற்றம்’ என்ற முகமூடியுடன் ‘பழைய திசை, பழைய கொள்கை’யிலேயே பயணிக்கத் தொடங்கியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் 56,34,915 வாக்குகளை வழங்கி அனுரகுமார திசாநாயக்கவையும் பாராளுமன்றத்துக்கான தேர்தலில் 68,63,186 வாக்குகளை வழங்கி 141 எம்.பி.க்களை நேரடியாகவும் 18 எம்.பி.க்களை தேசியப்பட்டியல் மூலமாகவுமென 159 எம்.பி.க்களை பெற்று பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க ஆணை வழங்கிய மக்களில் தமிழ்,முஸ்லிம் மக்களும் கணிசமானளவுள்ள நிலையிலேயே அனுர அரசில் தமிழ், முஸ்லிம் மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் புறக்கணிக்கும், ஓரம்கட்டும் பழைய மாறாக் கொள்கையான இனவாதக் கொள்கையே முன்னெடுக்கப்படுகின்றது.

மக்களை உசுப்பேத்திய உரைகள், மக்களைக் கவர்ந்த வாக்குறுதிகள் மூலம் மக்களின் பெரும் நம்பிக்கையைப்பெற்று , ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற அநுரகுமார திசாநாயக்க முதலில் மூவின மக்களின் நம்பிக்கைகளையும் பொய்த்துப்போகச் செய்தார். சர்வதேச நாணய நிதியத்தின் சரத்துக்களை மாற்றம் செய்வோம் , மக்கள் நலன் சாரந்த விடயங்களில் மாத்திரம் ஒப்பம் இடுவோம் என்ற உறுதி மொழியை அவர் வழங்கியிருந்தார். ஆனால் ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில் முன்னெடுக்கப்பட்டதை அவ்வாறு எவ்வித மாற்றமும் இன்றி அடுத்த தவணை பணத்திற்காக கையொப்பமீட்டு வருகின்றார். மக்கள் மேல் கடந்த அரசு சுமத்திய வரிகளைக் குறைப்போம் என்று உறுதிமொழி வழங்கினர் ஆனால் அதே வரிகள் மாற்றம் ஏதுவும்மின்றி தொடர்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்பு சலுகைகளை நிறுத்துவோம் என்றார்.
அதற்கு அவரின் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

இவ்வாறான நிலையில், சிங்களவர்களைத் திருப்திப்படுத்தத் தனது பழைய மாற்றமில்லாக் கொள்கையான இனவாதத்தைக் கையில் எடுத்து சிங்களவர்களுக்கு அதே திசையைக் காட்டத் தொடங்கியுள்ளார். இதன் முதல் கட்டமாக ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் முதலில் இடம்பெற்ற மாகாண ஆளுநர்கள் நியமனத்தில் வடக்கு மாகாணத்திற்குத் தமிழ் ஆளுநரையும் மேல் மாகாணத்திற்கு முஸ்லிம் ஆளுநரையும் நியமித்த அனுரகுமார, தமிழ் அல்லது முஸ்லிம் ஆளுநர் ஒருவரையே கிழக்கு மாகாணத்திற்கு நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை புறந்தள்ளி கிழக்கிற்குச் சிங்கள ஆளுநரை நியமித்தார்.

அடுத்ததாகத் தனது அமைச்சரவை அமைச்சர்களாக 21 பேரை நியமித்த நிலையில் இந்த அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு இராமலிங்கம் சந்திரசேகர் என்ற மலையகத் தமிழர் ஒருவரும் சரோஜா சாவித்ரி போல் ராஜ் என்ற மாத்தறை தமிழ் பெண் ஒருவரும் மட்டுமே சிறுபான்மையினத்தவர்கள் சார்பில் உள்வாங்கப்பட்டனர். அதேநேரம், இலங்கை அமைச்சரவை வரலாற்றில் முதல் தடவையாக முஸ்லிம் ஒருவர் இடம்பெறாத அமைச்சரவை என்ற வரலாற்றையும் அநுர அரசு பதிவு செய்து கொண்டது

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாக்கி, சிறைகளில் அடைத்து, வன்முறைகளைத் தூண்டி முஸ்லிம்களின் சொத்துக்களை அழித்த கோட்டாபய அரசின் முதல் அமைச்சரவையில் கூட முஸ்லிம் ஒருவரே பிரதான அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட நிலையில் கோத்தபாய அரசில் பழிவாங்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி வழங்குவோம் .உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் உண்மை சூத்திரதாரிகளை அம்பலப்படுத்துவோம் என முழங்கி, முஸ்லிம்களின் வாக்குகளைப்பெற்று ஆட்சிக்கு வந்த அனுரகுமார அரசு, தனது அமைச்சரவையில் முஸ்லிம்களைப் புறக்கணித்தது.

வடக்கில் வரலாற்று பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுக்கொடுத்த தமிழ் மக்களுக்காக வடக்கிலிருந்து ஒரு தமிழ் பிரதிநிதியாவது அமைச்சரவைக்கு உள்வாங்கப்படுவார் என்று தமிழர்களும் ஜனாதிபதிக்கு 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை வழங்கியதால் ஒரு முஸ்லிமாவது, அமைச்சரவையில் உள்வாங்கப்படுவார் என்று முஸ்லிம்களும் வைத்திருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது.

இந்த இன வாத புறக்கணிப்புக்களுக்கு இடையிலும் அனுர அரசின் மீது நம்பிக்கையிழக்காத தமிழ், முஸ்லிம்கள் சபாநாயகர், நியமனத்தின் போது, தமது பிரதிநிதிகளுக்கு உரிய இடம் வழங்கப்படுமென்ற எதிர்பார்ப்பிலிருந்தனர். ஆனால் அசோக சபுமல் ரன்வல என்பவர் சபாநாயகராக நியமிக்கப்பட்டதோடு, பிரதி சபாநாயகராகவே முஸ்லிமான ரிஸ்வி சாலி என்பவர் நியமிக்கப்பட்டார். பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராக ஒரு சிங்கள பெண்மணியே நியமிக்கப்பட்டார். இதிலும் தமிழ்,முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டனர்.

சற்றும் மனந்தளராத விக்ரமாதித்தன் போல, பிரதியமைச்சர்கள் நியமனத்திலாவது தமது எதிர்பார்ப்பு நிறைவேறும் எனக்காத்திருந்த தமிழ்,முஸ்லிம்களுக்கு அதிலும் புறக்கணிப்பே கிடைத்தது அனுர அரசில், 29 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் வெளிவிவகார பிரதி அமைச்சராக அருண் ஹேமச்சந்திரா என்ற திருகோணமலைத் தமிழரும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சராக மொஹமட் முனீர் என்ற முஸ்லிமும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராக சுந்தரலிங்கம் பிரதீப் என்ற மலையகத் தமிழரும் மட்டுமே நியமிக்கப்பட்டனர். அதாவது அடையாளத்திற்காக சிறுபான்மையினங்களிலிருந்து ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டனர். இதிலும் தேசிய மக்கள் சக்திக்கு வரலாற்று வெற்றியாக 5 பிரதிநிதிகளைக் கொடுத்த வடக்கு மாகாணம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது.

இந்த இனவாத புறக்கணிப்புக்கள் தமிழ், முஸ்லிம்களுக்கு புதிய விடயம் அல்லவென்பதனால் அவர்கள் பொறுத்துப் போயிருப்பார்கள். ஆனால், தேசிய மக்கள் சக்தியில் வெற்றி பெற்ற தமிழ், முஸ்லிம்களுக்கு அனுபவம், அறிவு போதாது. அனுபவமற்றவர்களை,அறிவற்றவர்களை அமைச்சர்களாக நியமிக்க முடியாது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்த கருத்தே தமிழ், முஸ்லிம்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியுடன் இருக்கும் ஜே.வி.பியின் சிறுபான்மையினங்களுக்கு எதிரான உண்மை முகத்தையும் மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது.

யார் ஜனாதிபதியாகப் பதவியேற்றாலும் அவரின் அமைச்சரவையில் நிச்சயமாக தமிழ், முஸ்லிம்கள் இருப்பார்கள். அதற்கு தமிழ் முஸ்லிம்களின் ணைபவம், அறிவு, திறமை, விசுவாசம், நம்பிக்கையே காரணங்களாக இருந்து வந்தன. தேசிய மக்கள் சக்தியில் வெற்றி பெற்ற தமிழ், முஸ்லிம்களுக்கு அனுபவம், அறிவு போதாது என்றால் அனுர அரசில் நியமிக்கப்பட்டுள்ள 21 பேர் கொண்ட அமைச்சரவையில் 9 அமைச்சர்கள் தவிர, ஏனையவர்களுக்கு அரசியல் அனுபவம் உள்ளதா? இவர்கள் முன்னர் எம். பி.க்களாகவேனும் இருந்தவர்களா? அல்லது பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட 29 பேரில் எத்தனை பேருக்கு அரசியல் அனுபவம் உள்ளது? இவர்களில் எத்தனை பேர் முன்னர் எம்.பி.க்களாகவேனும் இருந்தவர்கள்? இவர்களின் பட்டங்கள்தான் இவர்களின் தகுதி என்றால் தமிழ், முஸ்லிம்களிலும் பலரும் அவ்வாறான பட்டங்களுடன் இருக்கின்றார்கள் தானே?

அதுமட்டுமன்றி, அண்மையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நிகழ்த்திய தனது அரசின் கொள்கைப் பிரகடன உரையும் தமிழ், முஸ்லிம் மக்களைக் குறிப்பாகத் தமிழ் மக்களை பெரும் ஏமாற்றமடைய வைத்துள்ளது. இன,மதவாதத்திற்கு இடமில்லை என்ற உறுதி மொழியைத் தவிரத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில்,பிரசாரங்களில் சிறுபான்மையினங்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் எதுவுமே கொள்கைப் பிரகடன உரையில் உள்ளடக்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி, ஜே .வி.பியின் செயலாளரான ரில்வின் சில்வா புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின்போது, அரசியலமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படும் என கூறி, தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தையும் அனுர அரசு மீதான கடும் அதிருப்தியையும் ஏற்படுத்திவிட்டுள்ளார். ஜே .வி.பி. எதிர்பார்த்ததை விடவும் இதன் பிரதிபலிப்புக்கள் கடுமையாக இருப்பதனால் தற்போது ரில்வின் சில்வாவின் கருத்துக்கள் திரிவுபடுத்தப்பட்டு, விட்டதாகக் கூறி, தமிழ் தரப்புகளையும் இந்தியாவையும் சாந்தப்படுத்தும் வேலைகள் இடம்பெறுகின்றன.

தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியுடன் இருக்கும் ஜே .வி.பியின் இவ்வாறான இனவாத நடவடிக்கைகள் மூலம் தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வர தமது சமூக கட்சிகளை, தமது தேசியக் கட்சிகளை புறக்கணித்து அனுரகுமார அரசிடம் மாற்றத்தை எதிர் பார்த்து பெரும் ஏமாற்றத்தையே தமிழ், முஸ்லிம்கள் அடைந்துள்ளனர் . தேர்தல் பிரசாரங்களில் ‘அனைவரும் சமம்’ என்ற கோஷத்தை பெரிதாக பிரசாரப்படுத்திய அனுரகுமாரவின் கட்சி ஆட்சிக்கு வைத்த பின்னர் ‘சிங்களவருக்குத் தமிழ், முஸ்லிம்கள் சமமில்லை’ என்ற மாற்றத்தையே ஏற்படுத்தி வருகின்றது.

## கடிதங்கள்



### முறையான வீதியின்றி அவதி

பசறை தேர்தல் தொகுதிக்குட்பட்ட கோனகல டொமைன் கிரிமுத்தன்ன மற்றும் ஹல்கஹதென்ன கிராமங்களைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முறையான வீதியின்றி அவதிப்படுகின்றனர்.

கோனகல கல்லூரிக்குச் செல்லும் இக்கிராம மாணவர்கள், மழைக்காலங்களில் பாடசாலை சமூகமளிக்கமாட்டார்கள் என அதிபர் டி.எம்.பிரவ்தீப் எரங்க தெரிவித்தார்.

இக்கிராமத்தில் ஓடும் ஓடையில் பாலம் அமைத்து, நெல் வயலை விரிவுபடுத்தி, செல்லக்கூடிய சாலை அமைக்க வேண்டும் என, கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நீரோடையை மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் கடந்து செல்கின்றனர். கடும் மழை பெய்யும் போதும் அந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

- பாலித்த ஆரியவன்ச



மு.நித்தியானந்தன்






# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 50

# அரசியல் ஜுவாலைக்குள் ஒரு நந்தவனம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அக்டோபர் 1976இல் ஆரம்பிக்கப்பட்டு, ஒன்றரை ஆண்டுகளின்பின், ஜூலை 1976இல் பொருளியல், வணிகவியல் துறைக்குத் துணை விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றேன். லேக்ஹவுஸ், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் குடிவிபரவியல் நிறுவனம், சசெக்ஸ் பல்கலைக்கழக களஆய்வு அலுவலர் என்று பல நிலைகளில் பணியாற்றிய பின், நான் ஏற்ற புதிய பணி இது.

1976ஆம் ஆண்டில் முதல் தடவையாக மாணவர்கள் வணிகத்துறைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

பேராசிரியர் க.கைலாசபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் தலைவராகப் பணியேற்று, அந்தப் புதிய கல்வி நிறுவனத்தை வழிநடத்திச் செல்லும் பெரும் பொறுப்பைச் சுமந்திருந்தார். நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் சிறப்புக் கற்கை நெறியில் பயின்று கொண்டிருந்தேனாயினும், தமிழில் சிறப்பு நெறியை மேற்கொண்டிருந்த மாணவர்களுக்கு அவர் விரிவுரையாற்றிய ‘புனைகதை’ வகுப்புகளுக்கு ஓராண்டாய்ச் சீராகச் சென்று அவரிடம் பாடம் கேட்டிருக்கிறேன். அவர் என் குருவுமாவார்..

அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிங்களத் துறைப்

பேராசிரியராகவிருந்த கலாநிதி ஸுச்சரித கம்லத், மனிதப் பண்பியற் பீடத்தின் பீடாதிபதியாகவிருந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து அவரை நான் நன்கறிவேன். சிங்கள கலை இலக்கிய உலகில் நன்கறியப்பட்டவர். மார்க்சிய ஈடுபாடு மிக்க கம்லத், இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்ட அபூர்வமான மனிதர். தனது அரசியலுக்காக ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் பல்கலைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, பதினைந்து ஆண்டுகள் ஆண்டுகள் அவர் தொழில் இன்றி அல்லலுற்றார்.

பேராசிரியை சித்ரலேகா மௌனகுரு என்னுடன் சமகாலத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர் அங்குத் தமிழ்த் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தார். பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான் மொழியியல் சிறப்புப் பட்டம் பெற்று, அவரும் அங்கு இணைந்திருந்தார்.

மெய்யியல் அறிஞர் செ.வே.காசிநாதனின் மாணவராக எம்.எஸ்.அனஸ், மெய்யியல் துறைக்கு விரிவுரையாளராக வந்தமை புதிய நல்வரவாக அமைந்தது. விசாலமான இதயமும் மாண்பும் மிக்கவர் அனஸ்.

ஏ.ஜே. என்னும் நல்லறிஞன், ஆங்கிலப் போதனாசிரியனாய் அப்பல்கலைக் கழகத்தை அணி செய்திருந்த காலமும் அதுவே.

இந்த நல்லறிஞர் கூட்டம் எனக்குப் பெருந்துணையாய் அமைந்தது. அரபு இஸ்லாமிய நாகரிகத் துறையைச் சேர்ந்த கே.எம்.எச்.காலிதீன் சில காலம் எனக்கு திருக்குர்ஆன் போதித்தார். “கலிமா சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்துவிடுங்கள்” என்று ஒருமுறை சொன்னார். நல்ல இதயம் கொண்டவர் காலி தீன். இவர்களுடன் கா.ஆனந்தநடராஜா, சா.சத்தியசீலன், இர.சிவச்சந்திரன், ந.பேரின்பநாதன், அ.கணபதிப்பிள்ளை ஆகியோரும் வெவ்வேறு துறைகளில் பணிபுரிந்தாலும், குடும்ப நண்பர்களாய்க் குலவி மகிழ்ந்த காலம் ஒரு கனாக் காலமாய் மனதில் புகைமூட்டமிடுகிறது.

சிங்களச் சினிமாத்துறையின் கீர்த்தி மிக்க தர்மசேன பத்திராஜ, யாழ். பல்கலைக்கழகத்தின் சிங்கள மொழி விரிவுரையாளராக இருந்த காலத்தில்தான் ‘பொன்மணி’ என்ற தமிழ்த் திரைப்படத்தைத் தயாரித்திருந்தார். ஹர்ஷா குணவர்த்தன, தயபால திராணகம போன்ற ஆளுமைகளும் அப்பல்கலைக்கழகத்திற்கு அணி சேர்த்தனர்.

கடந்த ஐம்பது ஆண்டு காலத்தைத் திரும்பிப் பார்க்கையில், பல நல்ல இதயங்களை இழந்துபோன துயரம் நெஞ்சை வாட்டுகிறது. ஒரு நீண்ட பட்டியல் கண்முன் விரிகிறது.

பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் முதல் விரிவுரையாளராக நியமனம் பெற்ற கா.ஆனந்தநடராஜா பொருளியல் கோட்பாட்டினைச் சிறப்புறக் கற்பித்து, மாணவர்களுக்குச் செழுமையான அடித்தளத்தை இட்டவர். கிழக்கு ஜேர்மனியில் கார்ல் மார்க்ஸ் பல்கலைக்கழகத்தில்

உயர்கல்விக்காகச் சென்றவர் சுகவீனமுற்று, அவர் நாடு திரும்பியமை துரதிர்ஷ்டமானது.

யாழ். பல்கலைக்கழகத்தில் 1977ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி நடைபெற்ற மாணவர் சங்கத் தேர்தலில் மலையக மாணவர்கள் தாக்கப்பட்ட நிகழ்வு பல்கலைக்கழகத்தின் கறை படிந்த பக்கம். இந்நிகழ்வினைக் கண்டித்து, மலையக மாணவர்கள் பக்கம் நியாயம் உள்ளது என்று தனிக் குரல் கொடுத்த மாண்பு ஆனந்த நடராஜாவினுடையது.

பேராசிரியர் கைலாசபதியின் காலத்தில் தற்காலிகப் பணியில் சேர்க்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கழிந்து, பேராசிரியர் சு.வித்தியானந்தன் உபவேந்தராக நியமனம் பெற்று, முறையான பல்கலைக்கழக யாப்பிற்கிணங்க அமைக்கப்பட்ட, பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இருவரும் உள்ளடங்கிய தேர்வுக்குழுவினரால் எங்கள் நியமனங்கள் நிரந்தரம் பெற்றன.

சில காலம் வணிகவியல் துறை, வேறொரு துறைத் தலைவரின் நிர்வாகத்தின் கீழும் வந்தது. அவரை வந்து சந்திக்குமாறு அவரது பியூன் மூலம் ஒரு முறை எனக்கு அழைப்பு விட்டிருந்தார்.

ஏதோ ஓர் அறை எண்ணைக் குறித்து, அந்த அறையில் முதல் நாள், நேரம் எல்லாம் துல்லியமாகச் சொல்லி, அங்கு விரிவுரை எடுத்தீர்களா? என்று கேட்டார். ‘ஆம், சில சமயங்களில் ஒதுக்கப்பட்ட விரிவுரை நேரங்கள் போதாது போனால், மேலதிகமாக சில விரிவுரைகளை எடுப்பதுண்டு’ என்று பதில் கூறினேன். ஆனால் அதற்கு என்னிடம் ஏன் அனுமதி பெறவில்லை?’ என்றார்.

‘ஏன்? அந்த அறையை வேறு யாராவது விரிவுரைக்கு ஒதுக்கியிருந்தீர்களா?’ என்று கேட்டேன். ‘இல்லை, நீர் என்னிடம் அனுமதி பெற்றிருக்கவேண்டும்’ என்றார்.

அந்த அறையின் ஜன்னலுக்கூடே தெரிந்த மைதானத்தின் எல்லையில் நிழல் பரப்பி நின்றிருந்த மரத்தைச் சுட்டிக்காட்டி, “அந்த மரத்தின் கீழ் நான் வகுப்பு எடுத்திருந்தால் என்ன செய்வீர்கள்?” என்று கேட்டேன்.

அந்தப் பதிலை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த இனிய கல்விச் சூழலில், ஓர் உயர் கல்விக்கூடத்தில் அதிகாரத்தைச் செயற்படுத்தும் தீவிரம் எப்படியெல்லாம் தலையெடுக்கிறது என்பதை இப்போது நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

பேராசிரியர் டோனி ராஜரட்னம் பொருளியல், வணிகவியல் துறைத் தலைவராக அமர்ந்தபோது, அத்துறை சீராக வளர ஆரம்பித்திருந்தது. ஆங்கில மொழிக்கல்வி கோலோச்சிய ஒரு காலத்தில், பொருளாதார வரலாற்றைப் போதிக்கும் நல்லாசானாக டோனி ராஜரட்னம் புகழ் பெற்ற காலம் ஒன்றிருந்தது. தமிழ் மூலம் கல்விப்போதனை ஆரம்பமான ஒரு கட்டத்தில், வெகு சிலரே அதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது. அவரது போதனைக் காலம் கிட்டத்தட்ட பேராதனைக் காலத்தோடு முடிந்து விட்டது என்றே கூறவேண்டும். மிகுந்த எளிமையும் அன்பும் கொண்டவர் அவர். காசை வீசிச் செலவழிக்கும் பண்பு அவருடையது. இலண்டனில் அவரின் மறைவின்போது நான் அஞ்சலி உரையாற்ற நேர்ந்தது துயரமானது.

அவரின் காலத்தில் பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகி வந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எங்களுக்கு Advanced Economic Theory பாடம் எடுத்திருந்தார்.சிறந்த பொருளாதார அறிஞர். பொருளாதாரத் துறையில் பெரும்பாலானோர் பொருளாதார வரலாற்றையே ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டிருந்துள்ளனர். பாலகிருஷ்ணன் அவர்கள் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் (School of Economic Studies, University of Leeds), தனது முதுமாணிப் பட்டத்திற்காக Government Finance and Monetary expansion in Ceylon (1955-1965) என்ற ஆய்வேட்டைச் சமர்ப்பித்திருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலக் கல்வி ஆரம்பித்த காலப்பகுதியில், பொருளாதாரப் பிரிவுகள் அனைத்திலும் அயராது விரிவுரையாற்றிய அவரின் கடமையுணர்வு மிகமிக மெச்சத்தக்கது. “தேவை ஏற்படும்போது பல்வேறு பொறுப்புகளையும் கையேற்றுத் திறனோடு செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்” என்று உலகவங்கியின் பொருளாதார நிபுணராகத் திகழ்ந்த கலாநிதி சரத் ராஜபத்திரன குறிப்பிடுகிறார். இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உருவாக்கத்தில், பாலகிருஷ்ணன் அவர்களின் இலங்கை நாணய நிலைமை பற்றிய ஆய்வேடு மிகவும் உதவியிருக்கிறது.

பாலகிருஷ்ணன் நாணயமும் நேர்மையும் மிக்க கனவான். ஒரு பல்கலைக்கழகம் கொண்டிருக்க வேண்டிய பெரும் ஆளுமை அவர்.

பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறையினருடனும் ஓரினிய குடும்பமே போன்று உறவாடி மகிழ்ந்த நாட்கள், ஆறு ஆண்டுகளின் பின் முடிவுக்கு வந்தன.

1982ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் வழங்கிய குற்றச்சாட்டில் நான் கைது செய்யப்பட்டேன். குருநகர் இராணுவ முகாமிற்கும், பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் கொண்டு செல்லப்பட்டு, சிறை வைக்கப்பட்டேன்.

குருநகர் இராணுவ முகாமில் நான் தடுத்துவைக்கப்பட்டு மூன்று வாரங்கள் கழிந்த நிலையில், மேஜர் சரத் முனசிங்க அந்தத் துயரச் செய்தியை என்னிடம் சொன்னார். அதிர்ந்து போனேன்.

யாழ். பல்கலைக்கழகத் தலைவர் கைலாசபதி மறைந்து போனார் என்ற செய்தியை என்னால் நம்ப முடியவில்லை.

ஐம்பது வயதைத் தாண்டுவதற்குள் அவர் காலன் வசப்பட்டது உண்மையில் எனக்கு அதிர்ச்சிச் செய்திதான்.

எனக்கு ஓர் ஆசிரியன் என்பதற்கும் அப்பால், இனிய நண்பராகவும் இருந்தார். மாண்பு மிக்க மனிதர் அவர்.

நான் யாழ்ப்பாணத்திலிருந்த நாட்கள் கொந்தளிப்பானவை . அரசின் இனவாதக் கொடுங் கரங்கள் யாழ். மண்ணைக் கந்தக பூமியாக மாற்றிக்கொண்டிருந்த நேரம் அது.

‘நான் இளவயதில் குத்துச் சண்டை வீரனாக இருந்திருக்கிறேன். முகத்தில் குத்துவதுபோல் பாவனை பண்ணிக்கொண்டு, வயிற்றில் குத்துவதுதான் அந்தச் சண்டையின் யுக்தி. உண்மைதான். நான் ஒரு schemer தான்’ என்று வாக்குமூலம் தந்து, 21 ஜூலை 1977இல் தனது தேர்தல் வெற்றிக்கு விளக்கம் தந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பதவியேற்று ஒரு மாத காலத்தில் கட்டவிழ்த்து விட்ட இனக் கலவரத்தில் நூற்றுக்கணக்கான மலையகத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த லயங்கள் கொளுத்தப்பட்டன.

“இலங்கையில் ஒரு பெருந் துயரச் சம்பவம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அண்மையில் நடந்து முடிந்த தேர்தலுக்குப்பின், அரசியல் முரண்பாடு என்பது இனப்படுகொலையாக மாறிக்கொண்டிருக்கிறது” என்று The Times (20.9.1977) என்று லண்டன் ஏடு செய்தி வெளியிட்டது.

1978ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி விடுதலைப் புலிகள் தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் அது பயங்கரவாத தடைச் சட்டமாக உரு மாற்றம் பெற்றபோது, தமிழ் இளைஞர்களுக்கு எதிரான சுருக்குக் கயிறாகவே அது தோற்றம் தந்தது.

யாழ். நூல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் வண.பிதா போல் கெஸ்பர்ஸ் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கெதிராக நிகழ்த்திய கூட்டத்தில் நான் பங்கு கொண்டிருந்தேன். தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தச் சட்டத்திற்கெதிரான எந்தக் கண்டனக் கூட்டத்தையும் நடத்தவில்லை.

1979ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் திகதி பிரிகேடியர் ‘Bull’ வீரதுங்க இலங்கையின் முழு இராணுவப் படையின் பொறுப்பதிகாரியாக அமர்த்தப்பட்டு, 1979.12.31ஆம் திகதி முடிவில் பயங்கரவாதத்தை முற்றாக யாழ்ப்பாணத்திலிருந்து ஒழித்து விடவேண்டும் என்ற ராஜாங்கக் கட்டளையுடன் வடக்கிற்கு அனுப்பப்பட்டார். 11ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்ற பிரிகேடியர் வீரதுங்கவின் பணிப்பின்பேரில் பதின்மூன்றாம் திகதி (13.7.1979) இரவு இன்பம் (27 வயது), செல்வம் (29) என்ற இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு, மறுநாள் காலை பண்ணைப் பாலத்தில் கொடூரச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட நிலையில், அவர்களின் சடலங்கள் வீசி எறியப்பட்டிருந்தன. என் நெஞ்சில் ரணத்தை ஏற்படுத்திய நிகழ்வு இது. மரணங்கள் கௌவிக் கொண்ட இரவுகள்.

அந்த ஆண்டின் முடிவில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று, தனக்குத் தந்த பணியைச் செவ்வனே செய்து முடித்து விட்டதாக அறிவித்த வீரதுங்கவிற்குப் பாராட்டுத் தெரிவித்து, அவரைக் கனடாவின் இலங்கைத் தூதுவராக அனுப்பிவைத்தார் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன.

யாழ்ப்பாணத்தில் எரிமலை கனன்று கொண்டிருக்கிறது என்பது அந்த மூடர்களுக்குத் தெரியவில்லை.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யப்போவதாக அறிவித்தபோது, அரசாங்கத்தின் ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில் பல்கலைக்கழக தென்னாசியவியல் கருத்தரங்கு நடத்திய நிகழ்வில், ‘சிறுபான்மையினத்தின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளாமல் அரசு தயாரிக்கும் எந்தப் பிரதேச அபிவிருத்தித் திட்டமும் வெற்றியளிக்கமாட்டாது’ என்று கூறியிருந்தேன்.

மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றிய கருத்தரங்கிற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருங் கண்டனத்தைத் தெரிவித்தது. அறிவார்ந்த ஒரு பார்வையை அவர்கள் ஏற்றுக் கொள்ள இயலாமலிருந்தது எனக்கு வியப்பளித்தது.

யாழ்ப்பாண எம்.பி. வெ.யோகேஸ்வரன் ஒரு வெள்ளாந்தி மனிதர். “தமிழ் மக்களின் உயர் கல்விக்கூடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை சார்ந்த நிலைப்பாடு என்ன?” என்று நான் அவரிடம் நேசமாகவே கேட்டிருக்கிறேன். ஆபத்தான சந்தர்ப்பங்களில் இளைஞர்களுக்கு உதவும் மெல்லிதயம் கொண்டவர். அந்த நல்லெண்ணமே அவரின் உயிரைக் காவு கேட்டிருந்தது என்பது துயரக் கதை.

25.3.1981இல் நீர்வேலி வங்கிக் கொள்ளை நாட்டைத் திடுக்கிடவைத்தது.

1.6.1981இல் யாழ்ப்பாணப் பொதுநூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது.

மறுநாள் காலை, காகிதச் சாம்பரால் மூடப்பட்டிருந்த அந்த நூல் நிலையத்தைப் பார்த்துச் சிந்தை நொந்தவன் நான்.

நூல்கள் எப்போதும் எனது பொக்கிஷங்கள். எத்தகைய பேரழிவு இது.

அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து செய்து முடித்துவிட்டுச் சென்ற கோர நாடகம்.இந்த அவலங்களை யார் பொறுப்பார்?

‘ஈழநாடு’ எரியுண்டது. மக்கள் நெஞ்சங்களில் ஆத்திரம் கனன்று கொண்டிருந்தது.

1981ஆம் ஆண்டு சோகத்தோடு விடை பெற்றது. எதிர்காலத்தில் அந்த மண்ணில் நிகழப்போகும் அனர்த்தங்களுக்கு முன் நிமித்தமாக எல்லாமே நடந்து முடிந்திருந்தன.



## 20 வருடம் கழித்து அந்த உறவுகளுக்கு

# “ஒரு சிறிய கைமாறு அவ்வளவு தான்”

### காரைதீவு சமூக செயற்பாட்டாளர் லவன்

விபுலமாமணி.
வி.ரி.சகாதேவராஜா



**காரைதீவில் ஏற்பட்ட பெரும் வெள்ள அனர்த்தத்தின் போது, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மாயமான மதரஸா மாணவர்களின் உடலங்களை முழு மூச்சாக நின்று கண்டுபிடித்துக் கரை சேர்ப்பதில் செயல்பட்ட காரைதீவைச் சேர்ந்த இந்த இளைஞன் தவராசா லவன் முதன்மையானவர்.**

சமகாலத்தில் முஸ்லிம் தமிழ் மக்களின் மத்தியிலும் பேசப்படுகின்ற ஒரு சேவையாளனாக அவர் திகழ்கிறார். அந்த மீட்புப் பணிகள் முடிவுற்றதும் அவரை வீட்டுக்கு அழைத்துப் பெற்ற இந்த செவ்வி இவ்வாறு அமைகிறது.

ஆரம்பத்தில் அவர் இவ்வாறு கூறுகிறார்.

உயிர் பிரிந்ததும் அந்த உடல் சாதி மதங்களைக் கடந்து நிற்கும். அது மனிதக் குலத்தின் உடைய பொக்கிஷமாகக் கருதப்படும்.

பொக்கிஷங்களைத் தேடி அலைந்தமைக்கு,
சன்மானம் எதற்கு?
கௌரவம் எதற்கு?
விருந்துகள் எதற்கு?
விழாக்கள் எதற்கு?
பொன்னாடைகள் எதற்கு?

2004ஆம் ஆண்டு சுனாமியிலே தாய் தந்தையரை மற்றும் உறவுகளை இழந்து நிர்க்கதியாய் நின்ற எனக்கும் என் குல காரைதீவு மக்களுக்கும் உணவு, உடை, உறையுள் மற்றும் பாதுகாப்பு வழங்கி அடைக்கலம் தந்த ஊர்களில் சம்மாந்துறை மற்றும் மாவடிப்பள்ளி சிறப்பானதல்லவா.




20 வருடம் கழித்து 2024இல் அந்த உறவுகளுக்கு ஒரு சிறிய கைமாறு செய்யக் காலம் கை கூடியதை மட்டுமே அந்தக் கணமும் இந்தக் கணமும் எந்த கணமும் எங்கள் மனங்கள் உணர்ந்தது உணர்கின்றது உணரும். இதை மனதில் நிறுத்தி தயவுசெய்து எனக்கு எனது சகோதரர்களுக்கும் தொலைபேசி மூலமாகவோ கடிதங்கள் மூலமாகவோ வாழ்த்துக்கள் கூறுவதைத் தவிர வேறு எந்த விடயங்களுக்காகவும் எங்களை அழைத்து சங்கடத்தில் ஆழ்த்த வேண்டாம் என Team ராவணா சார்பில் என்றும் உங்கள் சகோதரனாக மனந்திறந்து கேட்டுக்கொள்கிறேன்.

எமது சேவைகளின் பின்னால் காரைதீவில் அமைந்துள்ள அனைத்து ஆலயங்களினதும் மற்றும் விளையாட்டு கழகங்களினதும் நிர்வாகங்களும், காரைதீவு உறவுகளும் பக்கபலமாக இருந்தார்கள் என்பதைத் தெரிவித்துச் சிறப்படைகின்றோம். ஒற்றுமையே பலம்.

இவ்வாறு கூறிய அவரிடம் அவரது பிறப்பு பற்றிக் கேட்டேன்.

நான் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மண்ணிலே 1990.07.16ஆம் திகதி மூன்று சகோதரர்களுடன் பிறந்தேன்.

14 வயதிலேயே சுனாமியிலே தாய் தந்தையை இழந்தேன். எனக்கு ஒரு சகோதரர் இரு சகோதரிகள் உள்ளனர். அதன் பின்பு எனது வாழ்க்கையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.






### அது என்ன மாற்றம்?

தாய் தந்தையை இழந்தவர்களுக்கு கண்டி திருத்துவ கல்லூரியில் இலவசமாக கற்பதற்கு ஒரு வாய்ப்பு செய்யப்பட்டது.

சுனாமியின் போது கண்டி திருத்துவ கல்லூரி அணியினர் காரைதீவு க்கு வந்து கிணறு சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்பொழுது இவ்வாய்ப்பு காரைதீவைச் சேர்ந்த பிரபல ஊடகவியலாளர் வி.டி.சகாதேவராஜா அவர்களிடம் சொல்லப் பட்டது. அவரே மணிமண்டபத்தில் அகதிகளாக இருந்த என்னிடம் கேட்டார். அவர் இவ்விடயத்தில் பிரதான பாகம் எடுத்தார்.

மற்றும் கண்டி எச்.டீ.ஓ. ஜூரீகாந்த் அவர்களும் இணைந்து என்னைத் திருத்துவ கல்லூரியில் சேர்ப்பதற்கு உதவி இருந்தார்கள்.

அந்த நேரத்தில், எனக்கு கண்டி தெரியாது. என்னை ஆனன் மற்றும் நடேசன் ஆகியோர் என்னை கண்டிக்குக் கொண்டு சேர்த்தார்கள்.

### கண்டி திருத்துவ கல்லூரி வாழ்க்கை எப்படி இருந்தது?

இது இலங்கையில் உள்ள ஓர் உயர் கலாசாலை. அங்கு ஐந்து வருட காலம் கற்கக் கிடைத்தது உண்மையிலேயே நான் செய்த பாக்கியம். ஐந்து வருடங்கள் ஏ.எல். வரைக்கும் கற்றேன் பின்பு குடும்ப சுமை காரணமாக மேலும் கற்க முடியாமல் வீட்டுக்கு வந்தேன்.

### பின்பு என்ன செய்தீர்கள்?

அப்பொழுது பொலிஸ் போக்குவரத்து பிரிவில் எனக்குத் தொழில் கிடைத்தது. பதினான்கு ஆண்டுகள் சேவையாற்றினேன்.


பின்பு-பொலிஸ் மாணவர் சிப்பாய் படையணியில் இணைந்து தற்போது மாணவர்களுக்கு அணிவகுப்பு பயிற்சிகளை வழங்கி வருகிறேன்.

### வெள்ள அனர்த்தத்தில் உங்களது சேவை பெரிதாகப் பேசப்பட்டது. அப்படி என்ன செய்தீர்கள்?

நாங்கள் ராவணா படகு சேவை ஒன்றைச் செய்தேன்.

அதில் வெள்ளத்தில் மாயமான மாணவர்களின் உடலைப் பெற்றுக் கொடுத்தோம். எங்களுடன் இன்னும் பலர் இணைந்து இருந்தார்கள். அது ஒரு பெரும் கைங்கரியமாக-இருந்தது. இதற்காக நாங்கள் யாரிடமும் ஒரு ரூபாய் கூட வாங்கவில்லை. வாங்கப் போவதுமில்லை.

ஆக நமசிவாயம் ஜெயகாந்தன் மற்றும் கிருபைராஜா ஆகியோரின்





இளைஞர் அணியினரும் எனக்கு ஒத்துழைப்பு தந்தார்கள். அதன் கணக்கு விபரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

நீங்கள் காரைதீவுக்கு கொக்கியை அறிமுகப்படுத்தியுள்ளீர்களே!

ஆம். நான் கண்டி திருத்துவ கல்லூரியில் இருக்கின்ற பொழுது இந்த கொக்கி விளையாட்டை கற்றுக்கொண்டேன். அதனை எமது ஊரிலும் அறிமுகப்படுத்த வேண்டும் என்பதற்காக இங்கு வந்து செய்தேன்.

இப்பொழுது எங்களுக்கு மிகவும் உற்சாகமாக ஆலோசகர்களாகச் செயற்பட்டவர்கள் சகாதேவராஜா, மறைந்த உருத்திரன், எஸ்.நந்தகுமார் சிதம்பரநாதன், உமாசங்கரன் ஆகியோர் எங்களுக்கு இற்றை வரைக்கும் இந்த கொக்கி விளையாட்டுக்கு உதவி செய்கிறார்கள்.

நாங்கள் மாகாண மட்டம் தேசிய மட்டம் வரைக்கும் சென்று சாதனைகள் பல படைத்திருக்கின்றோம்.

அப்பொழுது ட்ரக்ஸ் அமைப்பு மற்றும் பல அமைப்புகள் உதவி செய்தன. இப்போது அஸ்கோ அமைப்பு உதவி செய்கிறது. அவர்களை மறக்க முடியாது.

### கடற்கரையில் தண்ணீர் பந்தல் போட்டதாக கூறப்படுகிறதே?

ஆம். எனது மீன் வாடிக்கு முன்பாக தண்ணீர் பந்தல் ஒன்றை ஏற்படுத்தி உள்ளேன். அங்கு வருகின்றவர்கள் தாகத்தை தாராளமாக தீர்க்கலாம்.

### ஆன்மீக ஈடுபாடு பற்றி...

ஆம். வருடாவருடம் முள்ளு காவடி எடுப்பது. பாதயாத்திரையில் ஈடுபடுவது. யாத்ரீகர்களுக்கு உதவுதல். இப் பிராந்தியத்தின் தீமிதிப்பு நிகழ்விற்கு தீக்குழி தயாரித்தல் போன்றவை.

### உங்கள் எதிர்கால இலட்சியம்?

தொடர்ச்சியாக இதே போன்ற சேவைகளை முறையாக ஆலோசகர்களுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.






# “நான் கண்டிராத மிகப்பெரிய சோகங்களில் ஒன்று”



ஜி.எச்.நிமல் டி சில்வா
வீரப்பன் ராஜ்
திலக்












**ரஞ்சித் ராஜபக்ஷ**

இலங்கையில் 1974ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி, இந்தோனேசியாவிலிருந்து 182 ஹஜ் பயணிகளை ஏற்றிக்கொண்டு மக்கா நோக்கிப் பயணித்த Martin Air Dc 8 ரக விமானம், ஹட்டன், நோட்டன் ஏழுகன்னியர் மலையில் மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நடைபெற்று டிசெம்பர் 4ஆம் திகதியுடன் 50 வருடங்கள் நிறைவடைகின்றன. இவ்விபத்தினால், விமானிகள் உட்பட 191 பேர் அதே இடத்தில் உடல் சிதறி பலியாகினர். இவர்களில் 190 பேரின் உடல்கள்; கொத்தலென கந்த என்று அழைக்கப்படும் அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டன.

அடையாளம் காணக்கூடியவாறு இருந்த விமான பணிப் பெண்ணின் உடலை, அவரின் காதலர் ஹெலிகொப்டர் மூலமாக இந்தோனேசியாவுக்குக் கொண்டு சென்றார்.

விமான பாகங்களில் எஞ்சியிருக்கும் சில்லு ஒன்று மட்டும் இதுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அந்த சில்லானது, இச்சம்பவத்தை நினைவுக்கூறும் வகையில், நோட்டன் விமலசுரேந்திர அணைக்கட்டுக்குச் செல்லும் வழியில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவ்விடத்தில் சேகரிக்கப்பட்ட டொலர்கள் மற்றும் இன்னோரன்ன பொருட்களை அப்பிரதேச மக்கள் பாதுகாத்து வருகின்றனர்

விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில், நினைவுத்தூபி ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. விமானத்தின் கருப்புப் பெட்டி தகவலின்படி, தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே இவ்விமானம் விபத்துக்குள்ளாகியதாக தெரியவந்துள்ளது. விமானம் விபத்துக்குள்ளாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, சப்த கன்யார மலைத்தொடரில் உள்ள பாமுலமுல்கம தோட்டத்துக்குச் சென்றபோது, அங்கு விமான விபத்தில் உயிரிழந்தோர் புதைக்கப்பட்ட இடம் மரங்கள் புதைந்திருப்பதைக் கண்டோம்.

பின்னர் விமான விபத்தை நேரில் பார்த்த இருவரைக் கண்டுபிடிக்க முடிந்தது, அவர்கள் தங்கள் அனுபவங்களை எங்களுடன் பின்வருமாறு பகிர்ந்து கொண்டனர்.

### ஜி.எச்.நிமல் டி சில்வா,

நோர்வூட் -கிளங்கனைச் ஜி.எச்.நிமல் டி சில்வா (வயது 69), அப்போது எனக்கு 19 வயது என்றும் 1ஆம் கிராமத்தில் சாரதியாகப் பணிபுரிந்து வந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும், தியத்தலாவ இராணுவ முகாமின் கமுனுஹேவா படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய மேஜர் லக்கி அல்கமவுடன் விமான விபத்து நடந்த இடத்திற்கு கிட்டத்தட்ட நூறு படையினருடன் அப்போது சென்றார்.

விமான விபத்தின் பின்னர் மலையின் உச்சியிலும் கீழும் இருந்த இறந்தவர்களின் சடலங்களை சேகரிக்கப்பட்டன. எங்களை கொத்தலென சிங்கள மகா வித்தியாலயத்தில் நிறுத்தி விட்டனர். அதன்படி, சப்த கன்யூவின் அடிவாரத்தில் விமான விபத்தில் இறந்தவர்களின் உடல்கள் அடுக்கப்பட்டன. அதன்பிறகு, விமான விபத்தில் இறந்த 190 பேரின் உடல்கள் அந்த இடத்தில் ஒரு வெகுஜன புதைகுழியில் புதைக்கப்பட்டன. இது உண்மையில் என் வாழ்நாளில் நான் கண்டிராத மிகப்பெரிய சோகங்களில் ஒன்றாகும், அதை நினைத்துப் பார்க்கும்போது எனக்கு இன்னும் வருத்தமாக இருக்கிறது என்றார்.

### திலக்,

நோர்ட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சப்த கேணிக்காடு அடிவாரத்தில் வசிக்கும் திலக் (வயது 62) இது குறித்து கூறுகையில், விபத்து நடந்த போது எனக்கு 12 வயது, விமானம் விபத்துக்குள்ளானதை தொடர்ந்து ஏராளமானோர் அங்கு வந்து பார்த்தனர்.

அங்கு வந்த பலர் விமான விபத்தில் இருந்து கீழே விழுந்த விமானத்தின் பாகங்களை எடுத்து பார்த்தனர். விமானம் விபத்துக்குள்ளான இடத்தை பார்க்க ஏராளமானோர் பல நாட்களாக வந்தனர்.

### வீரப்பன் ராஜ்,

இந்த விமான விபத்தை நேரில் பார்த்த சப்த கன்னியா மலை அடிவாரத்தில் உள்ள டெபர்டன் தோட்டத்தை சேர்ந்த வீரப்பன் ராஜ் (வயது 58) என்பவர் கூறுகையில், விபத்து நடந்த போது எனக்கு 7-8 வயது இருக்கும்.

நாங்கள் அனைவரும் தொழிற்சாலையை நோக்கி ஓடினோம், அப்போது தோட்டத்தின் உரிமையாளர் ஜோயிசா என்ற ஒரு மனிதர், மலையில் விமானம் மோதியது போன்ற சத்தம் கேட்டதாக கூறினார்.

வனப்பகுதியில் பனிப்பொழிவு காரணமாக எங்களால் அங்கு செல்ல முடியாது என நோர்ட்டன் பிரிட்ஜ் பொலிஸாருக்கு தகவல் அனுப்பியதையடுத்து, விமானம் விபத்துக்குள்ளான இடத்தில் ஏராளமான பொலிஸார் மறுநாள் குவிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு ஹெலிகாப்டர்களும் வந்தன, அந்த இரண்டு ஹெலிகாப்டர்களும் கீழே நிறுத்தப்பட்டிருந்தன, விமானம் விபத்தை பார்க்க வந்த பலரும் விமானத்தில் இருந்து பாகங்களை எடுத்ததாகக் கூறினர்.


விமான விபத்துக்குப் பிறகு தரையில் விழுந்த விமானத்தில் பயணி ஒருவருக்கு சொந்தமானதாக இருக்கக்கூடிய ஹாங்காங் டாலர் பில் ஒன்றையும் கண்டுபிடிக்க முடிந்தது.

விபத்துக்குள்ளான விமானத்தின் சக்கரம் ஒன்று நோர்டன்பிரிட்ஜில் உள்ள விமலசுரேந்திரம நீர்த்தேக்கத்திற்கு முன்பாக இன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த விமான விபத்தில் உயிரிழந்த விமானிகள் மற்றும் பணியாளர்களின் பெயர்கள் நினைவுச் சின்னத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

















தென்கொரியா

## அவசரநிலை பிரகடனம்

# ஒரே நாளில் வாபஸ்



தென்கொரியாவில், அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு சில மணி நேரங்களில் எதிர்கட்சிகளின் போராட்டத்தால் அது இரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி வாயிலாக, செவ்வாய்க்கிழமை (03), பொதுமக்களிடம் உரையாற்றிய தென்கொரிய ஜனாதிபதி, யூன் சாக் யோல், நாட்டில், வடகொரிய ஆதரவாளர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காகவும், அரசுக்கு எதிரான சக்திகளை ஒடுக்குவதற்காகவும் நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்படுவதாக அறிவித்தார்.

50 ஆண்டுகளில், தென்கொரியாவில் அவசரநிலை சட்டம் அமல்படுத்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்த அவசரநிலை சட்டத்துக்கு எதிராக அந்நாட்டுப் பாராளுமன்றத்தில் 190 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். தொடர்ந்து, பாராளுமன்ற வளாகத்திலேயே போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்தச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், பாராளுமன்ற நுழைவாயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்து தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோலுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். உடனடியாக அங்கு இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் ஒரே நேரத்தில் பாராளுமன்றத்துக்குள் நுழைய முற்பட்டதால் இராணுவத்தினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, ஜனாதிபதியின் இந்த அவசரநிலை அறிவிப்பு செல்லாது என்று பாராளுமன்ற சபாநாயகர் வூன் வொன் சிக் அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, பாராளுமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த போராட்டக்காரர்கள் பலரும் ஆராவாரம் செய்துகொண்டாடினர். இந்த அவசரநிலை பிரகடன விவகாரம் பூதாகரமானதைத் தொடர்ந்து, ஜனாதிபதி யூன் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன.

தென்கொரியாவை 20 ஆண்டுகாலம் ஆட்சி செய்துவந்த பார்க் சங் ஹீ, 1979இல் கொல்லப்பட்டபோது, அங்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# தென்னாபிரிக்காவை வெல்லுமா இலங்கை?



தென்னாபிரிக்க, இலங்கையணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது கஹெபாவில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில், இலங்கை தோல்வியடைந்த நிலையில், தொடரையும், சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான வாய்ப்பைத் தக்க வைப்பதற்கும் இப்போட்டியில் வென்றாக வேண்டியுள்ளது.

குறிப்பாக துடுப்பாட்டமே சிக்கலாகவுள்ள நிலையில் சிரேஷ்ட வீரர்கள் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸிடமிருந்தும் அண்மைய நட்சத்திரங்களான பதும் நிஸங்க, கமிந்து மெண்டிஸ் ஆகியோரிடமிருந்து பெரிய இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அணியைப் பொறுத்தவரையில், மாற்றமிருக்காதென்றே நம்பப்படுகிறது.

மறுபக்கமாக தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரையில், காயமடைந்த ஜெரால்ட் கொயட்ஸியை டேன் பற்றர்சன் பிரதியிடுவதோடு, வியான் முல்டரை மத்தியூ பிறெட்ஸ்கி பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போட்டிக்கான ஆடுகளமானது இறுதி நாள்களில் சுழற்பந்துவீச்சுக்கு சாதகத்தை வழங்கலாமெனக் கூறப்படுகிறது.

மலேசியா/ தாய்லாந்து

## மலேசியா, தாய்லாந்தில் வெள்ளம்:

# 30 பேர் பலி; 3 இலட்சம் பேர் பாதிப்பு

மலேசியா மற்றும் தெற்கு தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளத்தில், 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

மலேசியாவில் கடந்த சில நாட்களாக அடைமழை பெய்து வருகிறது. குறிப்பாக மலேசியாவின் கிழக்கு கடற்கரை பகுதிகளில் கடந்த 6 மாதங்களில் பெய்த மழையை விட அதிக அளவு மழை கடந்த 5 நாட்களில் பெய்துள்ளது.

இதன் காரணமாக மலேசியாவின் கிளந்தான், திரங்கானு உள்ளிட்ட மாகாணங்களில் உள்ள பல்வேறு இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கனமழையால் மலேசியாவின் உள்கட்டமைப்பில் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்ய சுமார் ஒரு பில்லியன் ரிங்கிட்(224 மில்லியன் டொலர்) செலவாகும் என, மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம்



தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். அவர்களை மீட்பு படகுகள் மூலம் மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதேவேளை, தெற்கு தாய்லாந்திலும் அடைமழையுடனான வானிலை நிலவி வருகிறது.

அடைமழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளில் சிக்கி மலேசியா மற்றும் தெற்கு தாய்லாந்தில் இதுவரை சுமார் 30 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அரசு சார்பில் ஏற்படுத்தப்பட்ட 491 நிவாரண முகாம்களில் சுமார் 34 ஆயிரம் பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதாக, மலேசிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

தற்போது மழைப்பொழிவு சற்று குறைந்துள்ள நிலையில், பல பகுதிகளில் வெள்ள நீர் வடிந்து வருகிறது. ஆனால் அடுத்த ஓரிரு நாட்களில் மீண்டும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் கனமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மேற்கிந்தியத் தீவுகள் எதிர் பங்களாதேஷ்:

# தொடர் சமநிலையானது

மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வென்ற நிலையில், ஜமைக்காவில் சனிக்கிழமை (30) ஆரம்பித்து செவ்வாய்க்கிழமை (03) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியை பங்களாதேஷ் வென்ற நிலையிலேயே தொடர் 1-1 என்ற நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ், அல்ஸாரி ஜோசப் (2), கேமார்



றோச்சிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும் ஜாகிர் அலியின் 91 ஓட்டங்களை சகல விக்கெட்டுகளையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 287 ஓட்டங்களை தமது இரண்டாவது இனிங்ஸில் வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட் 43, கவெம் ஹொட்ஜ் 55 ஓட்டங்களைப் பெற்றபோதும் தஜியுல் இஸ்லாம்(5), தஸ்கின் அஹ்மட் (2), ஹஸன் மஹ்மூட் (2), நஹிட் ரானாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 185 ஓட்டங்களையே பெற்று 101 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக தஜியுல் இஸ்லாமும், தொடரின் நாயகர்களாக தஸ்கின் அஹ்மட்டும், ஜேடன் சியல்ஸும் தெரிவாகினர்.

கேரளா

## ஐயப்ப பக்தர்கள் பஸ் விபத்து;

# ஒருவர் பலி; 19 பேர் காயம்

கேளராவில், ஐயப்ப பக்தர்கள் சென்ற மினி பஸ் விபத்துக்குள்ளானதில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து, புதன்கிழமை (4) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்தில் இருந்து மினி பஸ் மூலம் சபரிமலைக்குச் சென்ற ஐயப்ப பக்தர்கள் 24 பேர், தரிசனத்தை முடித்துவிட்டு ஊருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

அப்போது ஆரியங்காவு சோதனைச் சாவடி அருகே சரக்கு லொறி ஒன்றின் மீது எதிர்பாராத விதமாக மினி பஸ் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், 46 வயதான பக்தர் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன், 19 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## ஜேர்மனியக் கிண்ணத் தொடர்:

# வெளியேற்றப்பட்ட பயேர்ண் மியூனிச்



ஜேர்மனியக் கிண்ணத் தொடரிலிருந்து பயேர்ண் மியூனிச் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் புதன்கிழமை (04) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான பயேர் லெவர்குசனுடனான விலகல் முறையிலான இத்தொடரின் இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில், 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து மியூனிச் வெளியேற்றப்பட்டுள்ளது.

லெவர்குசன் சார்பாகப் பெறப்பட்ட கோலை நாதன் டெல்லா பெற்றார்.

ஆந்திரா/தெலுங்கானா

# ஆந்திரா, தெலுங்கானாவில் நிலநடுக்கம்


ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆந்திரா மாநிலம் விஜயவாடா, விசாகப்பட்டிணம், ஜக்கையாபேட்டை உள்ளிட்ட பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் 5.3 ரிச்டர் அளவில் பதிவானது.

இதேவேளை, தெலுங்கானா மாநிலத்தின் ஐதராபாத் நகரின் பல பகுதிகளிலும், கம்பம், ரங்கார ரெட்டி, வாரங்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலும் ஹயாத் நகர எல்லைக்குட்பட்ட வனஸ்தலிபுரம், ஹயாத் நகர், அப்துல்லாபூர் மெட், ஹனுகொண்டா, கொத்தக்குடேம், மனுகூர், பத்ராசலம், சார்லா சிந்த கனி, நகுல வஞ்சா உள்ளிட்ட பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் பெரிய அளவில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. நிலநடுக்கத்தைக் கண்டு பொதுமக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





## சிம்பாப்வேக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய பாகிஸ்தான்

சிம்பாப்வேக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது. மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் வென்ற பாகிஸ்தான், புலவாயோவில் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 57/10 (12.4 ஓவ. )

(துடுப்பாட்டம்: பிரயான் பென்னட் 21 (14), தடிவனஷே மருமனி 16 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுஃபியான் முக்கீம் 5/3 [2.4], அப்பாஸ் அஃப்ரிடி 2/2 [2], சல்மான் அக்ஹா 1/7 [2], ஹரிஸ் றாஃப் 1/13 [2], அப்ரார் அஹ்மட் 1/21 [3])

பாகிஸ்தான்: 61/0 (5.3 ஓவ. )

(துடுப்பாட்டம்: சைம் அயூப் ஆ.இ 36 (18), ஓமைர் யூசுஃப் ஆ.இ 22 (15) ஓட்டங்கள்)

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி இம்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 05, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.